புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆகஸ்டு 10, 2017 புரட்சி 16 முழக்கம் 30 விலை: ரூ.3.00

## பரப்புரைக்குப் புறப்பட்டார்கள் கழகத் தோழர்கள்

# கருத்துகளுக்கு மக்கள் பேராதரவு



*இழந்து வரும் உரிமைகளை மீட்போம்; தமிழ் நாட்டில் தனித்தன்மை காப்போம்; பரப்புரைக்கு பொது மக்கள் பேராதரவை வெளிப்படுத்தி வருகிறார்கள்.*

இழந்து வரும் உரிமைகளை மீட்போம்; தமிழகத்தின் தனிச் சிறப்பைக் காப்போம் என்ற முழக்கத்தை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் 6 நாள் பரப்பரைப் பயணங்கள் தொடங்கின. சென்னையிலிருந்து புறப்படும் பரப்புரைக் குழு மட்டும் 7 நாட்கள் பரப்புரை நடத்துகிறது.

சென்னை பரப்புரைக் குழுவின் தொடக்கப் பொதுக் கூட்டம் ஜுலை 5ஆம் தேதி மாலை சென்னை ஜாபர்கான்பேட்டை கங்கை அம்மன் கோயில் அருகே சிறப்புடன் நடந்தது. ‘விரட்டு’ பண்பாட்டுக் கலைக் குழுவினர் கலை நிகழ்வுகள் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நடந்தன. நீட் தேர்வால் தமிழக மாணவர்கள் சந்திக்கும் நெருக்கடிகள், இந்தித் திணிப்பு, கதிராமங்கலம், புதுக்கோட்டை மக்கள் பாசனப் பகுதியை மலடாக்கும் ஓ.என்.ஜி.க்கு எதிராக நடத்தும் போராட்டங்கள் உள்ளிட்ட பயணத்தின் நோக்கங்களை விளக்கும் நிகழ்வுகளை இசையாகவும் வீதிநாடகங்களாகவும் நடத்தினர். கூட்டத்தினரை கலை நிகழ்ச்சிகள் மிகவும் ஈர்த்தன.

தொடர்ந்து சைதை மனோகரன் தலைமையில் கழகத் தோழர் சிவா வரவேற்புரையுடன் கூட்டம் தொடங்கியது. மாவட்ட செயலாளர் உமாபதி, தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் உரையைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி பயணத்தின் நோக்கங்கள் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.



‘விரட்டு’ குழுவினரின் கலை நிகழ்ச்சி

6ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் இராயப்பேட்டை பெரியார் படிப்பகம் அருகிலிருந்து பரப்புரைப் பயணம், பறை இசை முழக்கத்துடன் புறப்பட்டது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பெரியார் படிப்பகத்தில் அருகே உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார்.

பரப்புரை வாகனத்தில் பயணத்தின் கோரிக்கை முழக்கங்கள் - பெரியார், அம்பேத்கர், காமராசர் படங்களோடும் கோரிக்கை விளக்கப் படங்களுடனும் மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வண்ண ஒட்டுப் படங்கள் ஒட்டப்பட்டிருந்தன. பயணத்தின் கோரிக்கை வாசகங்கள் பொறிக்கப்பட்ட கருப்பு ‘டி’ சட்டைகளை அணிந்து கழகத்தின் இளைஞர் பட்டாளம் உற்சாகத்துடன் பயணத்தைத் தொடங்கியது. இந்துத்துவ பா.ஜ.க. சக்திகளின் மக்கள் விரோத கொள்கைகளையும் மத வெறி ஜாதி வெறி ஆபத்துகளையும் மக்களிடையே கொண்டு செல்லும் இலட்சியப் பணியாற்றப் புறப்படுகிறோம் என்ற பெருமிதமும் பூரிப்பும் உணர்வும் தோழர்களிடையே நிரம்பி வழிந்ததைக் காண முடிந்தது.




பயணத் தொடக்கப் பொதுக் கூட்டம்

சுட்டெரிக்கும் வெய்யிலில் முதல் பரப்புரை நிகழ்வு ஜுலை 6ஆம் தேதி காலை 10 மணியளவில் பல்லாவரத்தில் அம்பேத்கர் சிலை அருகே தொடங்கியது.

பயணத்தின் பொறுப்பாளர்களில் ஒருவரான விழுப்புரம் அய்யனார் முதல் நாள் பயணம் குறித்து தந்துள்ள செய்தி:

முதல் நிகழ்வாக பல்லாவரத்தில் விரட்டு கலைக் குழுவினரின் பயணத்தின் நோக்கத்தை விளக்கி கலை நிகழ்ச்சி, வீதி நாடகம் நடைபெற்றது. மக்கள் விடுதலை (மா.லெ.) அமைப்பைச் சார்ந்த கண்ணன் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

பிற்பகல் 12 மணியளவில் பொழிச்சலூர் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 3 மணியளவில் பம்மல் பேருந்து நிறுத்தம் அருகிலும், மாலை 5 மணியளவில் குன்றத்தூர் அண்ணா சிலை அருகிலும் பரப்புரை நடைபெற்றது. மக்கள் விடுதலை (மா.லெ) கட்சி சார்பில் செந்தில், சென்னை மாவட்ட கழக செயலாளர் இரா. உமாபதி, காஞ்சிபுரம் மாவட்ட பொறுப்பாளர் இரவி பாரதி, விழுப்புரம் அய்யனார் ஆகியோர் உரை நிகழ்த்தினர். பாவலர் கீர்த்தி, குன்றத்தூரில் நடைபெற்ற பரப்புரையில் சாதி ஒழிப்புப் பாடலை பாடினார்.

மக்கள் விடுதலை (மா.லெ.) அமைப்பைச் சார்ந்த சிறிராம், பரிமளா, தமிழ்க் குமரன் ஆகியோரும் தலைமை நிலைய செயலாளர் தபசி குமரன், வேழவேந்தன், இரா. செந்தில் குமார், யேசு குமார், சா. ராஜ், இலட்சுமணன், தர்மா, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோரும் பம்மல் வரை பங்கேற்றனர். சிறு வியாபாரிகள், பொது மக்கள் மத்தியில் பிரச்சாரத்திற்கு நல்ல வரவேற்பு கிடைக்கிறது. இரவு உணவு தங்குவதற்கு அம்பேத்கர் சமூக நீதி அமைப்பைச் சார்ந்த பாண்டியராஜன், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தைச் சார்ந்த கரு. அண்ணாமலை ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

இளநீர் குமார் மதிய உணவுக்கு ரூ.1000/-, இரவி பாரதி ரூ.500/- வழங்கினர். கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் கழகத் தோழர்கள் மக்களிடையே துண்டறிக்கை வழங்குதல், கடை வசூல் என்று தோழர்களின் களப்பணி மக்களின் பாராட்டைப் பெற்றது.

இரண்டாம் நாள் பயணம் 7ஆம் தேதி தாம்பரத்திலிருந்து தொடங்குகிறது.

மயிலாடுதுறை பயணக் குழு ஆகஸ்டு 7 ஆம் தேதியும் மேட்டூர், கோவை, மதுரை பயணக் குழு 8 ஆம் தேதியும் பயணத்தைத் தொடங்குகின்றன. ●

**தலையங்கம்**

## ‘ஒற்றை ஆட்சி’ ஆபத்து!

மோடியின் நடுவண் ஆட்சி இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பை முற்றாக ஒழித்துவிட்டு ஒற்றை ஆட்சி முறையாக மாற்றியமைத்திடும் சட்டபூர்வ முயற்சிகளைத் தொடங்கிவிட்டது. மொழி வழியிலமைக்கப்பட்ட மாநிலங்களும் மாநிலங்களுக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள இறையாண்மையும் இந்தியாவை ‘இந்துத்துவா’ நாடாக்கும் முயற்சிக்கு பெரும் தடையாக இருப்பதை உணர்ந்து ஆர்.எஸ்.எஸ். வழிகாட்டுதலோடு இந்த ஆபத்தான திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கிவிட்டனர்.

பொதுப் பட்டியலில் கல்வி உரிமை இருப்பதைப் பயன்படுத்தி தேசிய கல்விக் கொள்கையும் நீட் தேர்வுகளும் வந்து விட்டன. உணவு உரிமைப் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் மாநிலங்களின் உணவு உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளது. மும்மொழித் திட்டம் திணிக்கப்படுகிறது. மாநில உரிமைகளின் கீழ் வரும் கால்நடைத் துறையிலும் தலையிட்டு மாட்டு விற்பனையை ஒழுங்குப்படுத்தும் சட்டங்களைக் கொண்டு வந்தனர். மருத்துவ சுகாதார சேவைகளையும் முடக்குகிறார்கள். இப்போது மாவட்ட தலைநகரங்களில் உள்ள மருத்துவமனையின் சில பகுதிகளை தனியே பிரித்து, தனியாருக்கு குத்தகைக்கு விடும் ஒரு ஆபத்தான யோசனையும் பரிசீலிக்கப்பட்டு வருகிறதாம். ‘நிதி அயோக்’ அமைப்பு இப்படி ஒரு விபரீத பரிந்துரையை வழங்கியிருக்கிறது. மாநில அரசுக்கு அரசியல் அமைப்பு வழங்கியுள்ள மறைமுக வரி விதிப்பு உரிமைகளையும் சரக்கு – சேவை வரி விதிப்பு சட்டத்தின் கீழ் பறித்து விட்டார்கள்.

இந்த ஆபத்துகளை எதிர்த்து கருநாடகம், கேரளம் போன்ற மாநிலங்கள் குரல் கொடுக்கத் தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒரு திருப்பம். இந்தியா என்ற பார்ப்பன – பனியா அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தமிழ்நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்று குரல் கொடுத்த தலைவர் பெரியார். திராவிட முன்னேற்றக் கழகம் தென்னக மாநிலங்களின் கூட்டமைப்பை முன் வைத்து இனவழி கூடி மொழி வழி பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய திராவிடக் குடியரசு கூட்டாட்சியை வலியுறுத்தியது. இவை கடந்தகால வரலாறு. இந்தக் கோரிக்கைகள் கைவிடப்பட்டாலும் அதற்கான நியாயங்கள் அப்படியே இருக்கின்றன என்று அண்ணா கூறினார். பெரியார் தனது இறுதி உரையிலும் ‘தனித் தமிழ்நாடு’ என்ற இலட்சியத்தை வலியுறுத்தினார்.

ஆனாலும் வரலாற்றுச் சூழல் ‘தனி நாடு’ இலட்சியங்களை நேரடியாக முன் வைக்க முடியாமல் அதற்கான மாற்றுத் தீர்வுகளை முன் வைக்க வேண்டிய கட்டாயத்தை உருவாக்கின. இப்போது பா.ஜ.க.வின் ஒற்றை ஆட்சியை நோக்கிய நகர்வுகள் தீவிரமடையும் போது குறைந்தபட்சம் ‘மாநிலங்களின் தன்னாட்சி’ என்ற இலட்சிய முழக்கத்தை முன் வைக்கும் கடமையை வரலாறு தமிழர்கள் மீது சுமத்தியிருக்கிறது. அண்ணாவைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த முதல்வர் கலைஞர் கருணாநிதி, நீதிபதி இராஜமன்னார் தலைமையில் மாநில சுயாட்சி பற்றி ஆராய ஒரு குழுவை நியமித்தார். அக்குழுவில் சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சந்திரா ரெட்டி, சென்னை பல்கலைக் கழக துணைவேந்தர் இலட்சுமண சாமி (முதலியார்) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். மாநிலத்துக்கு சுயாட்சி, மத்தியில் மாநிலப் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டாட்சி என்ற பரிந்துரையை 1969ஆம் ஆண்டு அக்குழு வழங்கியது மட்டுமல்ல, தமிழக சட்டமன்றத்திலும் அது ஏற்கப்பட்டது.

அந்த வகையில் தமிழகத்தின் கல்வி, சுகாதாரம், வரி விதிப்பு உள்ளிட்ட உரிமைகளை மீட்டெடுப்பதற்கான போராட்டத்தோடு தமிழகத்தின் தனித்துவத்தைக் காப்பதற்கான அடிப்படையான இலட்சியங்களையும் முன்னெடுக்க வேண்டும். தமிழ்நாட்டுக்கென அரசியல் சட்டம்; தமிழ்நாட்டுக்கென தனிக் கொடி தமிழ்நாட்டுக்கான கல்வி, பண்பாட்டுக் கொள்கைகள் போன்ற முழக்கங்களை முன்னெடுக்க வேண்டும். கர்நாடக முதல்வர் தங்கள் மாநிலத்துக்கு தனிக் கொடி வேண்டும் என்று கேட்பதுபோல் தமிழகத்திலும் மாநிலத்துக்கு தனிக்கொடி வேண்டும் என்ற கோரிக்கையை முதல்வர் கலைஞர் கருணாநிதி 1969இல் வலியுறுத்தியிருக்கிறார். மாநில முதல்வர்களிடம் இது குறித்து கலந்து ஆலோசிப்பதாக 1970இல் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியும் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்திருக்கிறார். இதே இந்திரா காந்தி மத்திய மாநில உறவுகளில் நெருக்கடிகள் உருவாகியபோது சர்க்காரியா ஆணையம் ஒன்றை நியமித்தார். அதன் அறிக்கையும் மாநிலங்களுக்கான தன்னாட்சி உரிமைகளையே பரிந்துரை செய்தது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் தமிழ்நாடு தன்னாட்சிக்கான கொள்கைகளை தமிழ்நாட்டு மக்களிடம் கொண்டு செல்ல வண்டிய தேவையும் கடமையும் இருக்கிறது. தமிழ்நாட்டை இந்து பார்ப்பனியம் விழுங்கி விடும் ஆபத்துகளை முறியடிக்கும் மாற்று, இது மட்டுமே!

## நாடாளுமன்றக் குழு அறிக்கையில் அதிர்ச்சித் தகவல்கள்

# மோடியின் “பணமதிப்பு நீக்கம்” படுதோல்வி




மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கை படு தோல்வியை சந்தித்திருக்கிறது. இந்த அறிவிப்பால் காதொடிந்த ஊசி நன்மைக்கூட ஏற்படவில்லை என்பது மட்டுமல்ல; மிக மோசமான கேடுகளையும் உருவாக்கியிருக்கிறது. இது குறித்து நாடாளுமன்றக் குழுவின் அறிக்கை தயாராகிவிட்டது. எதிர் வரும் குளிர்காலக் கூட்டத் தொடரில் நாடாளுமன்றத்தில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. அதற்கு முன்பே அறிக்கையின் முக்கிய பகுதிகளை ‘டெகல்கா.காம்’ இணைய இதழ் வெளியிட்டு விட்டது.

அதன் முக்கிய பகுதிகள் :

மோடியின் பண மதிப்பு நீக்க நடவடிக்கை மிகப் பெரும் தவறு; அந்த நோக்கத்தில் ஒன்றுகூட நிறைவேறவில்லை. ரூ.1000, 5000 நோட்டு செல்லாது என்ற அறிவிப்பால் 5-லிருந்து 7 இலட்சம் கோடி கருப்புப் பணம் வெளியே வந்து விடும் என்று மோடி அறிவித்தார். ஆனால் ரூ.4,172 கோடி அளவிலான பணம் தான் கறுப்புப் பணம் என்று சந்தேகிக்கும் அளவுக்கு கண்டறியப்பட்டிருக்கிறது என்று நிதியமைச்சகமே ஒப்புக் கொள்கிறது.

பயங்கரவாதிகளிடம் பதுங்கியுள்ள கறுப்புப் பணம் முடக்கப்படும்; பயங்கரவாத நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படும் என்ற அறிவிப்பும் பொய்த்துப் போய்விட்டது. பண நோட்டு பரிமாற்றம் குறைந்து கிரெடிட், டெபிட் கார்டு என்று டிஜிட்டல் பரிமாற்றம் வந்துவிடும் என்றார் மோடி. அதுவும் நடக்கவில்லை. மோடியின் பணமதிப்பு நீக்க நடவடிக்கை அறிவிக்கப்பட்ட 2016 நவம்பர் 8 ஆம் தேதிக்கு முன்பு இருந்த நிலைதான் அப்படியே நீடிக்கிறது.

பணமதிப்பு நீக்க நடவடிக்கை, சிறு தொழில்களை முற்றாக நசுக்கியதோடு ஒழுங்கமைக்கப்படாத துறைகளையும் கடுமையாக பாதித்துவிட்டது. பாரதிய ஜனதா கட்சியின் தொழிற் சங்கமான பாரதிய மஸ்தூர் சங் அமைப்பே மோடியின் பண மதிப்பு நீக்க அறிவிப்பால் 4 கோடி வேலைகள் பறிபோய் விட்டன. 3 இலட்சம் சிறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுவிட்டன என்று ஒப்புக் கொள்கிறது. இந்த அறிவிப்பை வெளியிடும் உரிமை ரிசர்வ் வங்கிக்குத்தான் உண்டு. ஆனால் அமைச்சரவையையோ ரிசர்வ் வங்கியையோ கலந்து ஆலோசிக்காமல் மோடி தன்னிச்சையாக அறிவித்தார். 1000, 500 ரூபாய் நோட்டுகளை புதிதாக வெளியிடாமல் 2000 ரூபாய் நோட்டுகளை மட்டுமே அரசு வெளியிட்டது. அதுவும் ஏ.டி.எம். எந்திரத்துக்கு பொருந்தி வரக்கூடிய அளவில் வெளியிட வேண்டும் என்பதைக் கூட திட்டமிடாமல் வெளி யிட்டார்கள். தேவையான எண்ணிக்கையிலும் நோட்டுகள் இல்லாததால் ஏ.டி.எம். வங்கிகள் மக்களுக்கு பணம் வழங்க முடியாமல் திணறிப் போய் நின்றன. மக்கள் மணிகணக்கில் கியூவில் காத்திருந்தார்கள். கிராமப்புற ‘ஏ.டி.எம்.’களில் இப்போதும் பணம் இல்லை.

இந்த மோசமான நடவடிக்கையால் கல்வி, சுகாதாரம் போன்ற முக்கிய சேவைத் துறைகளுக்கு தேவையான நிதியை ஒதுக்க முடியாமல் நிதிக் குறைப்பு செய்ய வேண்டிய நிலை உருவாகியது. இதில் மிக மோசமாக பாதிக்கப்பட்டது கல்வித் துறை. நிதி ஒதுக்கீடுகள் நிறுத்தப்பட்டன; கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டது; ஆய்வுக்கான திட்டங்கள் நிறுத்தப்பட்டன; சேமிப்பு, வைப்பு நிதிக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட்டது.

திட்டமிட்ட இந்த படுமோசமான அறிவிப்புக்கு பொறுப்பேற்கப் போவது யார்? இந்த அறிவிப்புக்குப் பிறகு மோடியின் சாதனையாக ஏடுகளில் பக்கம் பக்கமாக விளம்பரங்கள் செய்வதற்கும் அச்சடிக்கப்பட்டு புதிய நோட்டுகளை வங்கிகளில் கொண்டு போய் சேர்ப்பதற்கும் அரசு செலவிட்ட தொகை ரூ.30,000 கோடிக்கும் அதிகம். இந்த வீண் விரயத்துக்கு யார் பொறுப்பு? அது மட்டுமின்றி உரிய நேரத்தில் பணம் கிடைக்காமலும் கியூ வரிசையில் மணி கணக்கில் நின்றதாலும் மரணமடைந்தவர்கள் 180க்கும் அதிகம். மோடி இதற்கு மக்களிடம் பதில் சொல்வாரா? அல்லது இந்தியாவின் வரலாற்றில் பொருளாதாரத்தை சீர் குலைக்கும் சர்வாதிகார முடிவை எடுத்த மனிதர் என்ற வரலாற்று அவப்பெயரை சுமக்கப் போகிறாரா? இந்த அறிக்கையை வெளி வராமல் தடுக்கும் முயற்சிகளில் மத்திய அமைச்சர் ஒருவர் கடுமையாக முயன்று வருகிறார். ஊடகங்கள் இந்த மூடி மறைக்கும் முயற்சிகளை கடுமையாக எதிர்த்து வருகின்றன. இவ்வாறு டெகல்கா.காம் செய்தி வெளியிட்டுள்ளது.

## அர்ச்சகர் பயிற்சி பெற்று 19 ஆண்டுகளாக வேலைக்கு காத்திருக்கும் இளைஞர்கள்

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற உத்தரவின்படி அதற்கான பயிற்சியை முடித்தவர்களுக்கு பணி வழங்காதது தொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை திருவெற்றியூரை சேர்ந்த சபரி என்பவர் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

அனைத்து ஜாதியைச் சேர்ந்தவர்களும் அர்ச்சகர் ஆகலாம் என்று கடந்த 2006 ஆம் ஆண்டு தமிழக அரசால் ஆணை வெளியிடப்பட்டது. இதன்படி அனைத்து பிரிவினருக்கும் அர்ச்சகர் பயிற்சி அளிக்க 6 மையங்கள் அமைக்கப்பட்டன. அதில் நான்கு மையங்கள் சைவத்திற்கும், இரண்டு வைணவத்திற்கும் ஒதுக்கப்பட்டன. இந்த மையங்களில் 2007- 2008 ஆம் ஆண்டில் 207 பேர் பயிற்சி முடித்தனர். அதில் நானும் ஒருவன். அதன் பிறகு 2008ஆம் ஆண்டு எனக்கு ஜூனியர் சைவ அர்ச்சகருக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. எனவே 2006ஆம் ஆண்டு வெளியிட்ட அரசாணையின் படி அர்ச்சகர் பயிற்சி முடித்தவர்களை கோவில்களில் பணியமர்த்தியிருக்க வேண்டும். ஆனால் 208 பேரில் ஒருவருக்குக் கூட இதுவரை பணி வழங்கப் படவில்லை.

தமிழக அரசு கோவில்கள் அர்ச்சகர் பணிக்கு காலியாக உள்ள இடங்கள் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டு அங்கு தகுதியானவர்களை நியமிக்க வேண்டும். ஆனால் இதுவரை ஒரு கோவில் கூட இது தொடர்பான அறிவிப்பை வெளியிடவில்லை. கடந்த மார்ச் 13 ஆம் தேதி இது தொடர்பாக ஒரு மனுவை தமிழக அரசுக்கு நான் அளித்து இருந்தேன். அந்த மனு மீது இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே தமிழகத்தில் ஒற்றை சன்னதி கொண்ட ஆகமக் கோவில்களின் பட்டியலை இரண்டு தமிழ் நாளிதழ்களில் வெளியிட உத்தரவிட வேண்டும். மேலும் அர்ச்சகர் பயிற்சி முடித்த நான் உட்பட 207 பேருக்கு பணி வழங்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப் பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி வி.பார்த்திபன் இது தொடர்பாக இரண்டு வாரத்தில் தமிழக அரசும், இந்து சமய அறநிலையத்துறையும் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

## மலேசிய மாநாடு எதிர்ப்பாளர்களுக்கு பதில்

# சமஸ்கிருதப் பண்பாட்டின் எதிர்ப்பே தமிழர்களுக்கான திராவிடம்

இனத்தால் “திராவிடன், மொழியால் தமிழன், உலகத்தால் மனிதன்” என்ற தலைப்பில் மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் கடந்த ஜூன் 24, 25 தேதிகளில் உலகத் தமிழ் உணர்வாளர் மாநாடு வெற்றிகரமாக நடந்தது. இதையொட்டி “இனியும் வேண்டுமா திராவிடம்?” என்ற தலைப்பில் மலேசியாவின் ‘தமிழ் மலர்’ நாளேட்டில் ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது. எழுத்து வித்தகர் விவேகானந்தன் என்பவர் இந்தக் கட்டுரையை எழுதியிருந்தார். அதற்கு உடனடியாக மறுப்பு தெரிவித்து அந்நாளேட்டுக்கு மறுப்புக் கட்டுரை ஒன்று அனுப்பப்பட்டது. மறுப்பை அந்த ஏடு வெளியிடவில்லை. அக் கட்டுரை இங்கே வெளியிடப்படுகிறது.

‘தமிழ்மலர்’ நாளேட்டில் (02.07.2017) ‘இனியும் வேண்டுமா திராவிடம்?’ என்ற தலைப்பில் எழுத்து வித்தகர் வே.விவேகானந்தன் எழுதியுள்ள கட்டுரை மாநாட்டின் நோக்கத்தை திசைதிருப்புவதாகவும் முரண்பட்ட வாதங்களையும் உள்ளடக்கியதாகவும் இருக்கிறது

திராவிடத்தைத் தூக்கி நிறுத்துவதற்காகவே கூட்டப்பட்ட இந்த மாநாட்டுக்கு தமிழ் உணர்வாளர்களை வரச்செய்வதற்காக ‘தமிழ் உணர்வாளர்கள் மாநாடு’ என்று தலைப்பிட்டு ஏமாற்று வேலை செய்துள்ளனர் என்று குற்றம் சாட்டுகிறது அக்கட்டுரை. மாநாட்டின் தலைப்பு “இனத்தால் திராவிடன், மொழியால் தமிழன், உலகத்தால் மனிதன்” என்பதாகும். மாநாட்டு சுவரொட்டி அழைப்பிதழ் அறிவிப்புகளும் விளம்பரங்களும் இதை வெளிப்படையாகவே பறைசாற்றுகின்றன. இதில் ஏமாற்றுவதற்கு என்ன இருக்கிறது?

திராவிட மொழிக் குடும்பத்தை ஆராய்ந்த கால்டுவெல், தேவநேயப் பாவாணர் போன்ற ஆய்வாளர்கள் திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்த மொழி தமிழ் என்பதையும், இந்தோ அய்ரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த சமஸ்கிருதத்திலிருந்து தமிழ் முற்றிலும் வேறுபட்டது என்பதையும் தங்கள் ஆய்வுகள் வழியாக நிலைநாட்டினர். தமிழுக்கு மூலம் சமஸ்கிருதம் என அதுவரை ஆரியப் பார்ப்பனர்கள் கூறிவந்த கருத்தை ஆழமாக மறுத்தன இந்த ஆய்வுகள். ஆனால் தமிழ் பேசிய தமிழினத்தில் ஆரியப் பார்ப்பனரின் சமஸ்கிருதப் பண்பாட்டு கலப்பால் தமிழினத்தின் மொழியின் அடையாளங்கள் சிதைக்கப்பட்டு தமிழர்கள் வாழ்வியல் சடங்குகளில் வழிபாட்டில் தமிழ் மொழியை நீக்கி சமஸ்கிருதமும் புரோகிதப் பார்ப்பனர்களும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். மலேசியாவில் தமிழ்ப்பள்ளி தொடக்க நிகழ்வுகளானாலும் தமிழர்கள் கட்டும் கோயில் கும்பாபிஷேகம் வழிபாடுகளானாலும் திருமணங் களானாலும் அங்கே தமிழ் விரட்டப்பட்டு சமஸ்கிருதமே புகுந்து கொண்டு நிற்கிறது. இது எப்படி சாத்தியமாயிற்று? திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்த மொழி தமிழின் இடத்தை இந்தோ அய்ரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்த ஆரிய பார்ப்பனர்களின் சமஸ்கிருதத்தை தமிழர்கள் மீது கடவுள் மொழியாகவும் புனித மொழியாகவும் திணிக்கப்பட்டதால் தானே! இந்த பண்பாட்டு சிதைவை எதிர்த்து ஜாதியையும் பார்ப்பனியத்தையும் விலக்கி வைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே கூட்டப்பட்டது தமிழ் உணர்வாளர் மாநாடு.

தமிழே முதன்மையானதாகக் கொண்ட திராவிட மொழிக் குடும்பத்தின் வழி திரும்பி வாருங்கள் என்று எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமும் தேவையும் இருக்கிறதா இல்லையா? அந்த நோக்கத்துக்காக முன்வைக்கப்பட்டது தான் ‘இனத்தால் திராவிடன், மொழியால் தமிழன்’ என்ற முழக்கம். இதை சிறுமைத்தனம் என்று கட்டுரையாளர் கூற வருகிறாரா?

தமிழர் என்னும் அடையாளத்தை மறைக்கவும் சிதைக்கவுமே திராவிடம் பயன்படுகிறது என்று எழுதும் கட்டுரையாளருக்கு நமது பதில் இது தான். தமிழரின் அடையாளத்தை சிதைத்து மறைத்து அழித்து வரும் சமஸ்கிருத பார்ப்பனிய பண்பாட்டி லிருந்து தமிழினத்தை மீட்டெடுக்கவே திராவிடர் என்ற அடையாளம் பயன்படுத்தப்படுகிறது

சேர சோழ பாண்டியர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டார்கள் என்பதைவிட அவர்கள் பார்ப்பனர்களையும் பார்ப்பனியத்தையும் வளர்ப்பதிலே ஆர்வம் காட்டினார்கள் என்பதையே மாநாட்டில் பேசியவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இதை குறிப்பிடாமல் மன்னர்கள் தங்களுக்குள் சண்டையிட்டு கொண்டதை மாநாட்டில் குறை கூறிப் பேசினார்கள் என்றும் மன்னர்கள் அக் காலத்தில் சண்டை போடுவது வீரத்தின் அடை யாளம் என்றும் கட்டுரையாளர் திசை திருப்புகிறார். சேர சோழ பாண்டியர்கள் வடநாட்டு பார்ப் பனர்களை அழைத்து வந்து சமஸ்கிருதப் பள்ளிகளைத் திறந்து பார்ப்பன அடிமையாகவே ஆட்சி நடத்தினார்கள் என்ற வரலாற்றை மறுக்க முடியுமா?

- அருள்மொழித்தேவன் என்ற தன்னுடைய தமிழ்ப் பெயரை இராஜராஜன் என்று வடமொழிப் பெயராக மாற்றிக் கொண்டான் தமிழ் மன்னன்.
- நான்மறை தெரிந்த அந்தணரை ஆதரித்தவன் முதலாம் இராஜராஜ சோழன்.
- மனுநெறி நின்று அஸ்வமேத யாகம் செய்தவன் முதலாம் இராஜராஜன்.
- மனுவாறு பெருக என்ற பெருமைக்குரியவன் முதலாம் குலோத்துங்க சோழன்.
- மனுநீதி வளர்த்து நின்றவன் விக்கிரம சோழன்.

இப்படி எல்லாம் தங்கள் பெருமைகளை கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் செதுக்கியும் பொறித்தும் வைத்து இதுவே தங்களுடைய வர லாற்றுப் பெருமையாக அறிவித்தவர்கள் சோழர்கள்

பிராமணர்களுக்கு ஏராளமான நிலங்களை தானங்களாக வழங்கினார்கள். ஏழை எளிய மக்களுக்கு பெண் பூப்படைவதிலிருந்து காது குத்து சடங்கு வரை 400 வரிகளை போட்டு வதைத்த சோழ மன்னர்கள் பார்ப்பனர்களுக்கு ஒரு வரி கூட போடவில்லை

> **“சேர சோழ பாண்டியர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டதைவிட பார்ப்பனியத்தை வளர்ப்பதிலேயே ஆர்வம் காட்டினார்கள்”**

தீண்டப்படாத மக்களுக்கு ஊரின் ஒதுக்குப்புறமாக சேரியை உருவாக்கியவர்கள் சோழர்கள். சோழர் காலத்தில் தான் வலங்கை இடங்கை என்று இரு ஜாதிப்பிரிவு அணிகள் உருவாக்கப்பட்டு இரு அணிகளும் கடும் யுத்தத்தையே நடத்திக் கொண்டிருந்தனர்.

பாண்டியர் காலத்திலும் அதைத் தொடர்ந்து வந்த நாயக்கர் மராட்டியர் காலத்திலும் பார்ப்பனியமும் வைதீகமும் கோலோச்சின என்பதற்கு அடுக்கடுக்கான ஆதாரங்களை ஆய்வாளர்கள் எழுதியிருக்கிறார்கள்.

மலேசிய தமிழ் உணர்வாளர்கள் மாநாட்டில் பேசியவர்கள் இப்படி தமிழும் தமிழரும் சிதைந்து அழிக்கப்பட்டுக் கிடந்ததை வரலாற்று ஆதாரங் களுடன் தங்கள் உரையில் சுட்டிக்காட்டினர். இது எப்படி தமிழை சிறுமைப்படுத்துவதாகும்? கட்டுரையாளர் பதில் தருவாரா?

கோயில்களில் தேவாரத்தை ஓதுவதற்கு ஓதுவார்கள் நியமிக்கப்பட்டார்கள். அர்ச்சனையில் தான் வடமொழி புகுத்தப்பட்டது என்று எழுதுகிறார் கட்டுரையாளர். தமிழில் தேவாரம் கோயில் தாழ்வாரத்தில் தான் நின்று கொண்டு பாடமுடிந்தது. ஆனால் கோயிலில் மூலவிக்கிரத்தை வழிபட சமஸ்கிருதத்துக்குத் தான் தகுதி, அங்கே தேவாரத் தமிழ் தீட்டாகிவிடுகிறது. இதைப் பெருமை என்று கூறுகிறாரா கட்டுரையாளர்? இதுதான் இவரது தமிழ் உணர்வுக்கான அடையாளமா?

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஒருவருக் கொருவர் சண்டை போட்டுக் கொண்டாலும் மொழித் தொடர்பும் மொழி ஒருமைப்பாடும் அவர்களிடையே இருந்தது என்கிறார் கட்டுரையாளர். தமிழர்கள் ஜாதி வாரியாகப் பிரிந்து நின்றாலும் தமிழ்மொழி தொடர்பு அறுபடவில்லை என்றும் வாதிடுகிறார் கட்டுரையாளர்.

ஆக, ஒரு இனத்தை ஓர்மை பெற்ற இனமாக்கி ஒருங்கிணைக்கும் வலிமை தமிழ் மொழிக்கு இல்லாமல் போய்விட்டது என்பதை கட்டுரையாளர் ஒப்புக் கொள்கிறார். ஓர்மை பெற்ற வலிமையான தமிழினத்தைக் கட்டமைக்க ஜாதி பெண்ணடிமை, மூடத்தனங்களற்ற ஒரு தமிழ்ச் சமுதாயத்தை உருவாக்க பண்பாட்டு புரட்சி தேவைப்படுகிறது. இந்தப் பண்பாட்டுப் புரட்சியியின் குறியீட்டுச் சொல் தான் தமிழர்களுக்கான திராவிடம்.

தமிழ்நாட்டில் திராவிட என்ற பெயரில் செயல்படும் அரசியல் கட்சிகள், பெரியார் கூறிய பார்ப்பனிய சமஸ்கிருத ஜாதிய பண்பாட்டு எதிர்ப்புகளை உள்ளடக்கிய திராவிடர் என்ற கருத்தியலிலிருந்து விலகிப்போய் விட்ட அரசியல் அதிகாரத்துக்கான கட்சிகள். இந்தக் கட்சிகளில் இடம் பெற்றுள்ள பெயர் கூட **திராவிட** என்பது தானே தவிர ஆரியரில்லாதவர்களை சுட்டும் குறிச் சொல்லான **திராவிடர்** என்பது அல்ல.

எனவே பெரியாரின் திராவிடர் கோட்பாட்டை யும் திராவிட அரசியல் கட்சிகளையும் ஒன்றாகப் போட்டு குழப்புவதே தவறு. மக்களை திசை திருப்பும் அந்தக் குழப்பத்தை இக்கட்டுரையாளரும் செய்திருக்கிறார்.

எந்தச் ஜாதியாக இருந்தாலும் தமிழைத் தாய்மொழியாக் கொள்பவர் எல்லோரும் தமிழர் தானே? என்று கேட்கிறார் கட்டுரையாளர்.

தமிழினம் என்பதற்கு அடையாளம் மொழியா? அல்லது ஜாதியா? என்பதை கட்டுரையாளர் விளக்க வேண்டும். ஜாதியும் வேண்டும் தமிழன் என்ற அடையாளமும் வேண்டும் எனக் கூறுவது அறிவுடைய வாதமா?

ஜாதியமைப்பு ஒருவர் உயர்ந்தவர், மற்றவர் கீழானவர் என்ற ஏற்றத்தாழ்வில் கட்டமைக்கப்பட் டிருக்கிறது. இந்த இனத்துக்குள்ளே ஒருவன் மேல்ஜாதி, ஒருவன் கீழ்ஜாதி, ஒருவன் தீண்டப்படாதவன் என்ற வேறுபாடுகளை நிலைநிறுத்திக்கொண்டு நாங்கள் எல்லோரும் தமிழ் பேசும் ஓரினம் என்றால் இதைவிட கேலிக்கூத்து வேறு இருக்க முடியுமா? சமஸ்கிருதப்பண்பாட்டை மறுக்கும் திராவிட மொழிக்குடும்பத்தில் மூத்தமொழி தமிழ் இந்தப் பண்பாட்டை ஏற்றத்தாழ்வை எதிர்க்கிறது. சங்ககாலத் தமிழர் வாழ்வில் தொடக்கத்தில் ஜாதி இருந்ததில்லை, சங்கம் மருவிய காலத்தில் வர்ணாஸ்ரமம் நுழைந்தது.

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பதே குறள் நெறி, இதுவே தமிழ்நெறி.

உலகப் பொதுமறையான குறள்நெறிக்கு எதிராக ஜாதியும் தமிழரின் அடையாளம் என கட்டுரை யாளர் எழுதுவதுதான் தமிழ்உணர்வா என்று கேட்கிறோம்.

சென்னை மாகாணம் அமைந்திருந்த காலத்தில் திராவிடம் தேவைப்பட்டது. மொழிவழி மாநிலம் அமைந்த பிறகு திராவிடம் தேவைப்படவில்லை என்று கட்டுரையாளர் எழுதுகிறார். இது நூற்றுக்கு நூறு சரியான கருத்து. மொழிவழி மாநில பிரிவினைக்குப் பிறகு பெரியாரே ‘திராவிட நாடு’ கோரிக்கையினை கைவிட்டார், ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கத்தைத்தான் முன்வைத்தார். திராவிட அரசியல்கட்சிகளான திமுக, அதிமுக மதிமுக போன்ற கட்சிகள் இந்தியாவை ஏற்றுக் கொண்டு தேர்தல்களிலே போட்டியிட்டு வருகின்றனர். இந்தக் கட்சிகள் தென்னக மாநிலங்களை இணைத்த திராவிட நாடு எதையும் கேட்கவும் இல்லை, அதே நேரத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்கும் இந்த தென்னக மாநிலங்களை தமிழ்நாட்டின் அனைத்துக் கட்சிகளுமே (அகில இந்திய கட்சிகளைத் தவிர) எதிர்த்துப் போராடித்தான் வருகின்றனர்.

கேரளக்காரர்களும், ஆந்திரர்களும், கன்னடர் களும் திராவிடத்தைப் பேசுகிறார்களா என்ற கேள்வியை கட்டுரையாளர் முன்வைக்கிறார். இதிலிருந்து நாம் பேசும் திராவிடம் அம்மாநில மக்களுக்கு சாதகமானது இல்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும். தென்னக மொழிகளுக்கு எல்லாம் மூலம் தமிழ் என்ற கண்ணோட்டத்தில் நாம் திராவிட மொழிக் குடும்பம் என்று கூறும் போது அதை எப்படி அவர்கள் ஏற்பார்கள் என்று எதிர்பார்க்க முடியும்?

திராவிட மொழிக் குடும்பத்தின் மூத்தமொழியான தமிழ் சமஸ்கிருதப் பார்ப்பன பண்பாட்டுக்கு நேர் எதிரானது என்ற பண்பாட்டு நோக்கில் சமஸ்கிருதப் பார்ப்பன பண்பாட்டில் மூழ்கிக்கிடக்கும் ஜாதித் தமிழனை ஆரியத்திற்கு அடிமைப்பட்ட தமிழனை சுயமரியாதையும் சமத்துவ உணர்ச்சியும் கொண்ட

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# இந்துத்துவ சக்திகளை எதிர்த்த அறிவியல் புரட்சியாளர் பார்கவா!

மனிதகுல முன்னேற்றத்தின் வரலாறு என்பது மாற்றுக் கருத்துகளின் வரலாறு என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தவர் விஞ்ஞானி புஷ்ப பார்கவா **(1928- 2017)**. அறிவியல் சிந்தனைக்கு (சைன்டிஃபிக் டெம்பர்) எதிரான நடவடிக்கைகளை எதிர்த்து வந்த இந்தப் புரட்சிக் குரல், கடந்த ஆகஸ்டு 1ஆம் தேதி ஓய்ந்து விட்டது.

உயிரி வேதியியலாளராகப் பணியைத் தொடங்கிய பார்கவா, இந்தியாவில் உலகத் தரத்திலான உயிரித் தொழில்நுட்ப ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என்று நம்பினார். அவரின் முயற்சியால்தான் 1977ஆம் ஆண்டு ஹைதராபாதில் 'உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையம்' தொடங்கப்பட்டது. 'ஆர்ட்டிஸ்ட் இன் ரெஸிடென்ஸ்' எனும் திட்டத்தைத் தொடங்கிய முதல் அறிவியல் மையம் இதுவாகத்தான் இருக்கும்.

மேலும், ஓவியர் எம்.எஃப்.ஹுசைனை அழைத்து, இந்த மையத்தில் சுவர் சித்திரத்தை வரையச் செய்தார். அதேபோல 1986ஆம் ஆண்டு, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ், உயிரித் தொழில்நுட்பத் துறை ஒன்றையும் ஏற்படுத்தினார். இந்த அமைப்புகள் மூலம், மக்களுக்குப் பயன்படும் விதத்தில், பல உயிரித் தொழில்நுட்ப ஆய்வுகளை, வணிக மயமாக்குவதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டார்.

எனினும், இலாபம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு மேற்கொள்ளப்படும் வணிக மயமாக்கலில் அவருக்கு உடன்பாடில்லை. 'மரபணுப் பொறியியல்' என்ற பதத்தைப் பயன்படுத்திய முன்னோடிகளில் ஒருவர் இவர். 'இந்திய நவீன உயிரியலின் வடிவமைப்பாளர்' என்று போற்றப்படுகிறார்.

தான் ஏற்படுத்திய உயிரித் தொழில்நுட்பத் துறை, உயிரித் தொழில்நுட்ப விதி முறைகளை முறையாகச் செயல்படுத்தாத போது, அதற்கு எதிராக வந்த முதல் குரல் பார்கவாவினுடையது. போபால் விஷவாயுத் தாக்குதலினால் ஏற்பட்ட நீண்ட காலப் பாதிப்புகளை ஆய்வு செய்ய பல மத்திய அறிவியல் அமைப்புகள் தயங்கியபோது, பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்றவர் பார்கவா.

1966ஆம் ஆண்டு கோல்வால்கர், பசு வதைத் தடைச் சட்டம் கேட்டு நாடாளு மன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்திய போது, பார்கவாவின் தலைமையில், 'பசு வதைத் தடைச் சட்டம் ஏன் கூடாது ?' என்ற ஒரு நிகழ்ச்சி நடந்தது. இதனால் ஆத்திர மடைந்த கோல்வால்கர், பார்கவாவிடம், "பசு எப்படி உண்ணும் பொருளாகும் ?" என்று கேட்க, பார்கவாவோ, "பசுவின் மாமிசத்தில் புரதம் இருக்கிறது. அந்தப் புரதம், அமினோ அமிலமாக மாறி, இரத்தத்தில் கலந்து, பல்வேறு உறுப்புகளுக்குச் சென்று, மீண்டும் அவை புரதமாக மாறுகின்றன" என்றார்.



தொடர்ந்து, "அப்படி யென்றால் பால் எப்படி ?" என்கிறார் கோல்வால்கர். "பாலும் இப்படித்தான் செயல்படுகிறது" என்றார் பார்கவா. உடனே, கோல்வால்கர், "அப்படியெனில், பசு மாமிசத்துக்குப் பதிலாகப் பசுவின் பாலைக் குடிக்கலாமே ?" என்று கேட்க, பார்கவா அமைதியாக இப்படிச் சொன்னார்: "பாலைப் போலவே நீங்கள் ஏன், மாமிசத்தையும் விரும்பி உண்ணக் கூடாது ?"

'வேத காலத்திலேயே விமானம் விட்டவர்கள் நாம்', 'புராண காலத்திலேயே பிளாஸ்டிக் சர்ஜரி செய்தவர்கள் நாம்' என்று அறிவியல் மாநாடுகளின்போது சொல்லப்படும் பொய்களைக் கேட்டுக் கொதிப்படைந்தார் பார்கவா. சி.எஸ்.ஐ.ஆர்., உள்ளிட்ட அரசு அறிவியல் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் நிதி அளவு குறைக்கப்பட்டதையும் எதிர்த்தார் அவர். இது போன்ற விஷயங்கள்தான், அவரை, தனக்கு அளிக்கப்பட்ட பத்ம பூஷண் விருதைத் திருப்பித் தர உந்தித் தள்ளியது.

'தி டிஸ்கவரி ஆஃப் இந்தியா' எனும் புத்தகத்தில் 'சைன்டிஃபிக் டெம்பர்' (அறிவியல் சிந்தனை) எனும் பதத்தைப் பயன்படுத்தினார் ஜவஹர்லால் நேரு. 'இந்திய அறிவியல் பணியாளர்கள் சங்க'த்தின் தலைவராகவும் நேரு இருந்தார். பிரதமர் ஒருவர், தொழிற் சங்கத்தின் தலைவராகவும் இருந்தது அதுவே முதலும் கடைசியும்! அந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருந்த பார்கவா, 1964-ல் 'தி சொசைட்டி ஃபார் சைன்டிஃபிக் டெம்பர்' எனும் அறிவியல் சிந்தனைக்கான ஒரு அமைப்பை உருவாக்கினார்.

1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 42ஆவது அரசியலமைப்புத் திருத்த நிகழ்வில், 'கூறு 51ஏ'வில், "அறிவியல் சிந்தனையை வளர்க்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் கடமை ஆகும்" என்ற திருத்தத்தைச் செய்ய வலியுறுத்தும்படி, அன்றைய கல்வித் துறை அமைச்சர் நூருல் ஹசனிடம் வேண்டினார் பார்கவா.

'கடந்த 85 ஆண்டுகளில் இந்தியா, நோபல் பரிசு வெல்லும் தகுதி உடைய ஒரு விஞ்ஞானியைக்கூட உருவாக்க முடியாமல் போனதற்கு, அறிவியல் சிந்தனை இல்லாமல் போனதே' என்று தன் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகிறார் பார்கவா. அது உண்மைதானே ?

**நன்றி : 'தமிழ் இந்து'**

## மழை கொட்டிய நிலையிலும் இடம் மாற்றி நடந்தது கழகக் கூட்டம்

வடசென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் ஜூலை 28 அன்று திருவேற்காடு வேலப்பன் சாவடியில் 'வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு' என்ற தலைப்பில் பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஒருவார காலமாகவே வடசென்னை கழகத் தோழர்கள் ஏசுகுமார், செந்தில், சங்கீதா, ராஜி மற்றும் தென்சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் கடை கடையாகச் சென்று துண்டறிக்கைகளை வழங்கி நிதி திரட்டினர். ஏ. தினேஷ் குமார் தலைமையில் கூட்டம் தொடங்கி காவை இளவரசு 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சியை நடத்தி முடிக்கும்போது மழை கொட்டத் தொடங்கிவிட்டது. உடனே கழகத் தோழர்கள் மேடைக்கு அருகே இருந்த வர்த்தக நிறுவனங்களின் மேற்கூரையிடப்பட்ட வராண்டாவில் இருக்கைகள் ஒலிபெருக்கிகளை மாற்றி கூட்டத்தை நடத்த முடிவு செய்தனர். ஒரு கருத்தரங்கம்போல் கூட்டம் தொடர்ந்து நடந்தது. கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர். தோழியர் சங்கீதா வரவேற்புரையாற்றினார். ரமேஷ் பிரசாந்த் முன்னிலை வகித்தார். தோழர் ராஜி நன்றி கூறினார். தோழர்கள் இறுதி வரை கருத்துகளைக் கேட்டனர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்பகுதியில் கழகக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.




**வெளி வந்துவிட்டது!**

**'நிமிர்வோம்'**

**ஆகஸ்டு இதழ்**

- கடவுள் மதம் குறித்து காமராசர்
- கண்களை குளமாக்கிய மஞ்சள் நாடகம்
- 'வந்தே மாதரம்' தேச பக்தி பாடலா ?
- 'காலச்சுவடு' வரலாற்றுப் புரட்டலுக்கு மறுப்பு
- ஜி.எஸ்.டி. பேரமா ? சரணா கதியா ?
- பராசக்தி: தணிக்கைக் குழு மீது பாய்ந்த பார்ப்பனர்கள்
- ஜெயராணி நேர்காணல்
- ஆர்.எஸ்.எஸ். எழுதும் புதிய மனு சாஸ்திரம்

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...
தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு : நிர்வாகி,
'நிமிர்வோம்' மாத இதழ்,
95, டாக்டர் நடேசன் சாலை,
அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர்,
சென்னை – 600 004.
தொலைபேசி எண் :
044 24980745 / 7299230363
www.dvkperiyar.com /
nimirvomdvk@gmail.com

## கதிராமங்கலம் மக்களுக்காக மதுரையில் கழகம் ஆர்ப்பாட்டம்

மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம் மேலூரில் 24.7.2017 அன்று நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் மாப்பிள்ளை சாமி வரவேற்புரையாற்றினார்.

தமிழ் பிரபாகரன் மாநகர் பொறுப்பாளர், சத்திய மூர்த்தி மேலூர் பொறுப்பாளர், ஆசிரியர் நடராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மீ.த.பாண்டியன் (தமிழ்நாடு மக்கள் கட்சி தலைவர்), வெ.கனியமுதன் (துணைப் பொது செயலாளர்), விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பேரறிவாளன் (பொதுச் செயலாளர்), தமிழ் புலிகள் கட்சி பெரியார். சரவணன், (மாநில கொள்கை பரப்புச் செயலாளர்). தமிழக வாழ்வுரிமை கட்சி கா.சு. நாகராசு. ஒருங்கிணைப்பாளர். பெரியார் திராவிடர் கழகம், சிதம்பரம் மாவட்ட செயலாளர், ஆதித்தமிழர் கட்சி தலித் .ராஜா ஆதித்தமிழர் பேரவை , தாஹா. SDPI கட்சி மேலூர் தொகுதி தலைவர் இரணியன், பொதுச் செயலாளர். வன வேங்கைகள் பேரவை ரோசி. சமூக செயற்பாட்டாளர் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

பரமக்குடி கர்ணன், ரமேஷ் , சகாயராஜ் , கோபால் உள்ளிட்ட தோழர்களும் தோழமை அமைப்பு தலைவர்கள் தோழர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்குபெற்றனர். அழகர் பிரபாகரன் நன்றி உரை கூறினார்.

நெடுவாசல் கதிராமங்கலம் கிராம மக்கள் மீதான பொய் வழக்குகளை திரும்ப பெற கோரியும் பேராசிரியர் ஜெயராமன் உள்ளிட்டோரை விடுதலை செய்ய கோரியும் திருமுருகன் காந்தி, வளர்மதி உள்ளிட்ட தோழர்கள் மீதான குண்டர் சட்டத்தை ரத்து செய்து அவர்களை விடுவிக்க கோரியும் மாவட்ட செயலாளர் மா.பா. மணி அமுதன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## பெரியார் பிஞ்சு இளம்பரிதி இயக்கத்திற்கு நன்கொடை

30.07.2017 அன்று திராவிடர் விடுதலைக் கழகத்தின் இணையதள பொறுப்பாளர் விஜய்குமார் மகன் இளம்பரிதிக்கு நான்கு வயது நிறைவடைந்து அய்ந்தாவது வயதில் அடி எடுத்து வைப்பதை கொண்டாடும் வகையில் 'புரட்சிப் பெரியார் முழக்க' சந்தா ரூ.1000 மற்றும் கோவை அணி சமூக நீதி சமத்துவ பயண பரப்புரை நிதியாக ரூ. 1000 ஆகிய இரண்டையும் திருப்பூர் மாவட்ட தலைவர் முகில் இராசுவிடம் வழங்கினார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழனாக மாற்றி தமிழினத்திற்கு வலிமை சேர்ப்பதற்குத் தான் திராவிடர் என்ற அடையாளமே தவிர, கன்னடர், தெலுங்கர், மலையாளிகளிடம் தமிழினத்தை அடிமைப்படுத்துவதற்கு அல்ல

இதற்கு மாறாக சமஸ்கிருதப் பண்பாட்டை தலைமேல் சுமந்து கொண்டு அது கட்டமைத்த ஜாதியின் அடிப்படையில் தமிழர்களை கூறு போடுவது தமிழருக்கான அடையாளமல்ல. அது தமிழர்களை காலம் காலமாய் பிரித்து அடிமைப் படுத்திய பார்ப்பனியத்தின் அடையாளத்தில் ஒன்றாகும்

தமிழ் உணர்வாளர் மாநாடு தமிழினத்தை பார்ப்பனியத்திலிருந்து விடுவிக்க திராவிடர் அடையாளத்தை கையில் எடுக்கிறது. திராவிடர் எதிர்ப்பாளர்கள் தமிழனை ஜாதி சகதிக்குள் அழுத்தி வைக்க திராவிடர் எதிர்ப்பைப் பேசுகிறார்கள்

நீ எந்த ஜாதி என்று சொல், நீ தமிழனா என்று நான் கூறுகிறேன்- என்று திராவிடஎதிர்ப்பாளர்கள் கேட்பதும், நீ எந்த ஜாதி என்று சொல், சமூகத்தில் உன் தகுதியை நான் நிர்ணயிக்கிறேன் என்று பார்ப்பனர்கள் கேட்பதும் ஒரே குரல் ஒரே சிந்தனை தான்

தமிழர்களின் உண்மையான நண்பர்கள் யார்? எதிரிகள் யார் என்பதை 'தமிழ் மலர்' வாசகர்கள் முடிவுசெய்து கொள்ளட்டும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th August 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN